**செய்தி வெளியீடு எண்: 933** **நாள்: 18.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 17.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கீழ் செயல்படும், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களை மறுசீரமைத்து புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) கீழ் செயல்படும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களை மறுசீரமைத்து புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை மறுசீரமைத்து புதிதாக உருவாக்கப்பட்ட நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் ஆகிய 2 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

இதன்மூலம், புதிதாக துவக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் 461 பிரதம சங்கங்கள் செயல்படும். அத்துடன், திருப்பூர் மாவட்டத்தில் 84,566 உறுப்பினர்கள் மூலம் நாளொன்றுக்கு 2,30,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். அதேபோன்று, புதிதாக துவக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் 495 பிரதம சங்கங்கள் செயல்படும். அத்துடன் நாமக்கல் மாவட்டத்தில் 1,08,300 உறுப்பினர்கள் மூலம் நாளொன்றுக்கு 1,64,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும்.

புதிதாக துவக்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில், புதிய பால் பதப்படுத்தும் ஆலைகள் நிறுவி இயக்கப்படும் வரை, நுகர்வோர்களுக்கு தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட ஒன்றியங்களிடமிருந்து பெறப்பட்டு, நாமக்கல் மற்றும் திருப்பூர்

மாவட்ட ஒன்றியங்கள் மூலம் தடையின்றி விநியோகிக்கப்படும். நாமக்கல் மற்றும் திருப்பூர் மாவட்ட ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய நிர்வாகத்தின் மூலம், சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பால் கொள்முதல், பால் விற்பனை மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை அதிகரித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கிடைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**